**தமிழ்நாடுஅரசு**

**சுருக்கம்**

வேளாண்மை விற்பனை- ஈரோடு விற்பனைக்குழு - மஞ்சள் வணிக வளாகம் அமைத்தல்- ஆணை வெளியிடப்படுகிறது

---

**வேளாண்மை (வேவி2)துறை**

அரசாணை (நிலை) எண்.41
நாள்: 06.02.2004.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.165, வேளாண்மைத்துறை, நாள் 9.5.99.

படிக்க:-

2. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் நே.மு.கடித எண்.விகுதி4/13523/96, நாள் 15.7.2002 மற்றும் 9.8.2002.
3. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் நே.மு.கடித எண்.விகுதி4/13523/96, நாள் 9.12.2002.
4. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கடித எண்.வே/47740/01, நாள் 19.12.2001.
5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் நே.மு.கடித எண்.விகுதி4/13523/96, நாள் 30.1.04.

ஆணை:

பல ஆண்டு காலமாக ஈரோடு மாவட்டத்தில் ஒரு மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்காக கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. இந்த வளாகத்தினை ஈராடு நகரத்தின் 5 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைக்க வேண்டும் என்று ஈரோடு மாவட்ட சுமை தூக்குவோர் மத்திய சங்கம் அரசைக் கேட்டுக்கொண்டது. மஞ்சள் வர்த்தக தொலைநோக்கு வளர்ச்சியின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவரும் பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் அவ்வாறே அமைக்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளார்.

2. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரும் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மஞ்சள் வணிக வளாகத்தை ஈரோடு மாவட்டத்தில் எங்கு அமைக்க வேண்டும் என்பதை அரசு அளவில் முடிவெடுக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில் ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பது குறித்து இடம் தேர்வு செய்ய 28.1.2004 அன்று வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை செயலாளர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகிய மூன்று அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஈரோட்டைச் சுற்றியுள்ள நான்கு இடங்களில் தல ஆய்வு செய்தனர். மேலும்,வியாபாரிகள், விவசாயிகள் ஆகியோருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் அவர்களின் கருத்துக்களும் கேட்கப்பட்டன.

4. அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் தேர்ந்தெடுத்த 4 இடங்களைப் பார்வையிட்டு நசியனூர் பகுதியில் உள்ள இடத்தைப் பரிந்துரைத்துள்ளனர்.

5. ஏனெனில், நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இடம் ஈரோடு நகரிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மேலும், கொச்சின் - சென்னை தேசிய நெடுஞ்சாலை எண்.47-ல் இருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிற்குள் உள்ளது. இந்த இடத்தில் சுமார் 48.8.0 ஏக்கர் இடம் உள்ளது. இந்த இடத்திற்கு, மஞ்சள் சாகுபடியாளர்கள் தங்களுடைய வேளாண் பொருட்களை வாகனங்களின் மூலம் ஈரோடு நகருக்குள் நுழையாமலேயே நேரடியாக கொண்டு வர முடியும். சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலிருந்தும் கர்நாடக மாநிலத்திலிருந்தும், கோபி, சத்தி, அந்தியூர், பவானி ஆகிய மஞ்சள் விளையும் பகுதிகளிலிருந்தும், இந்த இடத்திற்கு எளிதாக விவசாயிகள் தங்கள் பொருட்ளர்கள் தங்களுடைய வேளாண் பொருட்களை வாகனங்களின் மூலம் ஈரோடு நகருக்குள் நுழையாமலேயே நேரடியாக கொண்டு வர முடியும். சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலிருந்தும் கர்நாடக மாநிலத்திலிருந்தும், கோபி, சத்தி, அந்தியூர், பவானி ஆகிய மஞ்சள் விளையும் பகுதிகளிலிருந்தும், இந்த இடத்திற்கு எளிதாக விவசாயிகள் தங்கள் பொருட்களை எடுத்துவர இயலும். அதேபோல, வியாபாரிகள் பல்வேறு இடங்களுக்கு தேசிய நெடுஞ்சாலை மூலம் அனுப்பிட இயலும். இங்கு, வளாகத்திற்கு வேண்டிய தண்ணீர் கிடைப்பதற்கும் வழி வகை உள்ளது. மேலும், வணிக வளாகத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலைகள், பரிவர்த்தனைக் கூடங்கள், தகவல் தொடர்பு மையம், வங்கி, அஞ்சல் அலுவலகம், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கான அலுவலகம், விவசாயிகள் ஓய்வெடுக்க வசதி, வாகனங்களை நிறுத்துமிடங்கள் ஆகியவை ஏற்படுத்துவதற்கு ஈரோடு விற்பனைக் குழுவிற்கு தேவையான நிலத்தை மஞ்சள் வணிகர்களே வாங்கி நன்கொடையாக தருவதற்கும் உறுதியளித்துள்ளனர். மேலும், வணிகர்களுக்கான அலுவலகங்கள், கிட்டங்கிகள் ஆகியவற்றை தங்களுடைய செலவில் பொது வடிவமைப்பில் (Common Design) கட்டிக்கொள்ளவும் இசைந்துள்ளனர். சாதாரணமாக 40ரூ இடம் கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவைப்படுகிறது. எனவே, இதன் மூலம் விற்பனைக்குழுவிற்கு மிகக் குறைவான செலவே ஏற்படும் என கருதப்படுகின்றது. மேலும், 50 ஏக்கரில் 20

ஏக்கருக்கு மேற்பட்டு வணிகர் சங்கங்கள் நிலச் சொந்தக்காரர்களிடம் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் உடனடியாக மேற்படி இடத்தில் மஞ்சள் வணிக வளாகம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக மூன்று அலுவலர்களும் அரசுக்கு பரிந்துரைதுள்ளனர். அரசு உயர் அலுவலர்கள் ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்கு பதிலாக ஈரோடு மாவட்டம் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இ,டத்தில் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்கான பரிந்துரை செய்துள்ளார்கள்.

6. அரசாங்கம் இந்தப் பரிந்துரையை ஏற்று ஈரோடு மாவட்டம் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இடத்தில் ரூ.36.32 கோடி (ரூபாய் முப்பத்தாறு கோடியே முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்) மொத்த செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க ஆணையிடுகிறது. மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையின்படி பெருந்துறை, சிப்காட் தொழிற்பேட்டையில் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்காக ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையினை ரத்து செய்து ஆணையிடப்படுகிறது. மேலும், இதற்கென சிப்காட் நிறுவனம் கிரயம் செய்த 10 ஏககர் நிலத்தினை அந்நிறுவனத்திற்கு திரும்ப அளிக்கவும், கிரயம் செய்யப்பட்ட 10 ஏக்கர் நிலத்திற்காகவும், முன்பணமாகவும் ஈரோடு விற்பனைக் குழு நிதியிலிருந்து சிப்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரூ.100/- இலட்சம் (ரூபாய் நூறு இலட்சம் மட்டும்) தொகையினை மீண்டும் ஈரோடு விற்பனைக் குழுவிற்கு திரும்ப அளிக்கவும் அரசு ஆணையிடுகிறது.

7. நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைக்கப்படும் மஞ்சள் வணிக வளாகத்தில் விற்பனைக்குழு மற்றும் வேளாண்மை விற்பனை வாரியம் மூலமாக அமைக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவையான இடத்தினை ஈரோடு மாவட்ட மஞ்சள் வணிகர்களிடமிருந்து ஈரோடு விற்பனை குழு இலவசமாக பெறவும் அரசு ஆணையிடுகிறது. இந்த உள்கட்டமைப்பு பணிகளுக்காகத் தேவைப்படும் ரூ.11.32 கோடி (ரூபாய் பதினோரு கோடியே முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்) செலவினை ஈரோடு விற்பனைக்குழு நிதியிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண் விளைபொருள் விஈரோடு மாவட்ட மஞ்சள் வணிகர்களிடமிருந்து ஈரோடு விற்பனை குழு இலவசமாக பெறவும் அரசு ஆணையிடுகிறது. இந்த உள்கட்டமைப்பு பணிகளுக்காகத் தேவைப்படும் ரூ.11.32 கோடி (ரூபாய் பதினோரு கோடியே முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்) செலவினை ஈரோடு விற்பனைக்குழு நிதியிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரிய உபரி நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத் தலைமைச் செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு அரசு அனுமதியளிக்கின்றது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலோடு அதன்

அ.சா.கு.எண்.379/FS/P/2004, நாள் 31.1.2004ன்படி வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

பெறுநர்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை-32.
தலைமைச்செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியம், சென்னை-32
செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை-32 மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை-18 / (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை-35 / (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர், சென்னை-108.

நகல் :-

மாண்புமிகு முதலைமைச்சரின் செயலர், சென்னை.9
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச்செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலர், தொழில்துறை, சென்னை-9.
அரசு செயலர், நிதித்துறை, சென்னை-9.
அரசு செயலர், வருவாய்த்துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மாவட்டம்.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சி கழகம் (SIPCOT), சென்னை.
நிதித்துறை, சென்னை-9.
வேளாண்மை (வேவி1 /வேவி3) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.